## சட்ட உதவி ஆணைக்குழு - 2013

சட்ட உதவி ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கமளித்தல் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 27 ஆம் இலக்க சட்ட உதவி ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 23(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களிற்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சட்ட உதவி ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 233,500 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் தவறுதலாக கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) வழங்கப்பட்டும் கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த ரூபா 165,823 பெறுமதியான நாற்பது காசோலைகள் கடன்கொடுத்தோர் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக செலவினக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன்காரணமாக, மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் இரண்டு வங்கிக் கணக்குளினூடாக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,678,488 கொடுக்கல்வாங்கல்கள் கணக்குகளிற்கு எடுத்துவரப் படாதிருந்ததுடன் ஐந்தொகைத் திகதியிலுள்ளவாறான எஞ்சிய மீதி ரூபா 1,725,418 ஆக காணப்பட்டது.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை**

ரூபா 192,341 தொகையான 14 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2.2.4 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்**

(அ) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 31/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், ஓராண்டிற்கான விழா முற்பணமாக ஊழியர் ஒருவருக்கு ரூபா 5,000 இனை மாத்திரம் செலுத்த முடியும். இருப்பினும், இச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாட்டிற்கு முரணாக ஒவ்வொரு ஊழியருக்கும் ரூபா 12,000 வீதம் ரூபா 1,944,000 தொகையினை ஆணைக்குழு செலுத்தியிருந்தது. மேலும், 2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎவ்/பீஈ/5 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் இது தொடர்பில் தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தெய்யந்தர இலுள்ள சட்ட உதவி நிலையம் வாடகை கட்டிடமொன்றில் தொழிற்பட்டு வருகின்றது. நிலையத்தில் கதவு ஒன்றை பொருத்துவதற்காக ரூபா

68,750 அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த வேலைக்காக ரூபா 81,600 செலுத்தப்பட்டிருந்ததுடன் இத் தொகை கட்டிட வாடகையிலிருந்து கழித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 138(6), 139(1), 264 | கிரயப்பட்டியல்கள், பற்றுச்சீட்டுக்கள் போன்ற ஆதாரப்படுத்தும் ஆவணங்கள் 2013 சனவரி முதல் பெப்ரவரி வரையான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய ரூபா 205,448 கூட்டுத் தொகையான 20 கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 168, 169 | காசு, காசோலைகள், காசுக் கட்டளைகள் போன்றன கிடைத்தமை தொடர்பில் உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டொன்று வழங்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 14,514,470 தொகையான காசு மற்றும் காசோலைகளிற்காக ஆணைக்குழுவினால் அவ்வாறான பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகளிலிருந்தான நிதி வளைவுகள் முன்னைய ஆண்டிற்கான நேரொத்த பற்றாக்குறை ரூபா 18,536,369 உடன் ஒப்பிடுகையில் ரூபா 2,222,372 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டமையால், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 16,313,997 முன்னேற்றத்தைக் காண்பித்தது. வருமானம் ரூபா 21,542,923 ஆல் அதிகரித்திருந்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 36,486 நீதிமன்ற வழக்குகளில் 4,932 வழக்குகள் மாத்திரம் மீளாய்வாண்டில் பூரணப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 திசெம்பர் 31 வரை தீர்வு காணப்படாதிருந்த நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை 31,554 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டில் தலைமை அலுவலகத்தினாலும் ஏனைய 74 நிலையங்களாலும் 54,132 தனிப்பட்டவர்களுக்கு சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் இரண்டு புதிய சட்ட ஆலோசனை நிலையங்கள் தாபிக்கப்பட்டிருந்தன.

### 4.2 மனித வள முகாமைத்துவம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆணைக்குழுவின் பதவியணி இந்த அறிக்கைத் திகதி வரை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. உள்ளபடியான பதவியணியினர் நிலை வருமாறு.

| ஊழியர் வகை | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான பதவியணியினர் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான பதவியணியினர் |
|---|---|---|
| நிறைவேற்றுத் தரம் | 127 | 99 |
| நிறைவேற்றுத் தரமற்றோர் | 38 | 77 |
| ஏனையோர் | 45 | 39 |
| மொத்தம் | 210 | 215 |

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கொடுப்பனவுகள்
(ஆ) பற்றுச்சீட்டுக்கள்
(இ) வங்கிக் கணக்குகள்
(ஈ) மனிதவள முகாமைத்துவம்
(உ) பண்டிகை முற்பணக் கொடுப்பனவுகள்